**கவனிக்க.**-*2024.06.28 ஆந் திகதிய இல. 2391 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II (தமிழ் மொழிமூலம்) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2392 - 2024 ජූලි මස 05 වැනි සිකුරාදා - 2024.07.05
*2392 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு யூலை மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | *1571* |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | *1572* |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | - |
| ஆய விற்பனையும் குத்தகையும் | *1564* | நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2024, யூலை மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, யூலை மாதம் 12 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1563 - B 082586 - 5,403 (2024/07)

# ஆய விற்பனையும் குத்தகையும்

## கண்டி கடவத்சத்தர கங்க வட்ட கோரளை பிரதேச செயலாளர் பிரிவுக்குள் கள்ளுத் தவறணைகளைக் குத்தகைக்கு விற்றல் - 2024/ 2025

*1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பகிரங்கப்படுத்தப்பட்ட (பிரசுரிக்கப்பட்ட) 1983 ஆம் ஆண்டிற்கும் அதற்கு பிற்பட்ட காலப்பகுதிக்கும் ஏற்புடையதாக கள்ளுத் தவறணைகள் குத்தகைக்கு விற்கும் நிபந்தனைகளுக்கும் அக்காலப்பகுதியில் நடைமுறை வலுவுடையதான அனைத்து மதுவரி அனுமதிப்பத்திரங்களுக்கும் பொருந்தும் பொதுவான மதுவரி நிபந்தனைகளுக்கும் ஏற்ப 2024/2025 ஆம் ஆண்டில் கள்ளு சில்லறைக்கு விற்கும் சிறப்புரிமைகளை வாங்குவதற்கு கண்டி கடவத்சத்தர கங்கவட்ட கோரளை பிரதேச செயலாளராகிய என்னால் 2024.08.13ஆந் திகதி முற்பகல் 10.30 மணி வரையில் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.*

2. அனைத்து கேள்விப்பத்திரங்களும் இலங்கையில் உள்ள பிரதேச செயலகங்களில் ஏதாவது ஒன்றில் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பப்படிவத்தில் தயாரிக்கப்படல் வேண்டும். அத்துடன்-

(அ) கேள்வி வைப்புப் பணமாக கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிட்ட குறித்த கேள்விப்பிணைப் பணத்தொகையை இலங்கையில் உள்ள ஏதாவது ஒரு பிரதேச செயலகத்தில் வைப்புப் பணமாக வைப்பிலிட்டு பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டையும்,

(ஆ) கேள்விக்காரரின் காணிகள் போன்ற அசையா சொத்துக்கள் அமைந்துள்ள பிரதேசத்தில் பிரதேச செயலாளரிடமிருந்து பெற்றுக்கொண்ட தனது சொத்துக்கள் பற்றிய சான்றிதழையும் கேள்விப் பத்திரத்துடன் முன் வைத்தல் வேண்டும்.

கேள்விகளையும் சொத்துக்கள் பற்றிய சான்றிதழையும் முன் வைக்கும் கேள்விக்காரர்கள் மேற்படி கள்ளுத் தவறணைகளை விற்றலுடன் தொடர்புடைய நிபந்தனைப்பத்திரத்தில் அடங்கிய கட்டளைகளை முறையாகக் கடைபிடிக்க வேண்டுமென இத்தால் ஆணித்தரமாக அறிவிக்கப்படுகின்றது. கேள்விப்பத்திரங்களை நிரப்பும்போது கேள்விக்காரர்கள் கீழ்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்துதல் வேண்டும் :

(i) கேள்விப்பத்திரங்கள் முழுமையாக நிரப்பப்படல் வேண்டும். அவ்வாறு நிரப்பும்போது அங்கு குறிப்பிடும் தொகையை இலக்கத்திலும் எழுத்திலும் குறிப்பிடல் வேண்டும்.

(ii) நிரப்பிய கேள்விப்பத்திரத்தில் சாட்சியாளர்களின் கையொப்பம் இடப்பட்டிருத்தல் வேண்டும்.

(iii) அனைத்துத் திருத்தங்களும் சொற்கள் வெட்டப்பட்டிருத்தலும் கேள்விக்காரரின் சுருக்கக் கையெழுத்தொப்பத்துடன் திகதியும் இட்டு உறுதிப்படுத்தப்பட்டிருத்தலும் வேண்டும்.

(iv) பூரணமற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

3. முறையாக நிரப்பிய கேள்விப்பத்திரத்தை கேள்வி வைப்புப் பணம் வைப்பிலிட்டு பெற்றுக்கொண்ட -

(அ) பிரதேச செயலகப் பற்றுச்சீட்டுடனும்,

(ஆ) சொத்துக்கள் பற்றிய சான்றிதழுடனும்,

இணைத்து கடித உறையொன்றில் இட்டு முத்திரையிட்டு அந்தக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "தவறணையின் இலக்கமும் பெயரும்" குறித்து கண்டி கடவத்சத்தர கங்கவட்ட கோரளை பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் கேள்விப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் கால எல்லை முடிவதற்கு முன்பு இடுதல் வேண்டும். அல்லது கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் காலவரையறை முடிவதற்கு முன்பு கண்டி பிரதேச செயலாளருக்கு கிடைக்கும்படி பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

4. குத்தகை தொடர்பாக கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் முடிவு நேரம் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தகைய நேரங்களில் அனைத்து கேள்விக்காரரும் கண்டி பிரதேச செயலகத்தில் சமுகமளித்திருத்தல் வேண்டும்.

5. திருப்தியாக கேள்விப்பத்திரத்தை முன்வைத்த கேள்விக்காரர், சிறப்புரிமைகளை வாங்கியவர் எனப் பிரகடனப்படுத் தப்பட்ட பின் அன்றைய தினம் பி.ப. 2.30 மணிக்கு முன்பு கண்டி பிரதேச செயலாளரினால் விதிக்கப்படும் பணத்தொகையொன்றை பிணைப்பணமாக கண்டி பிரதேச செயலகத்தில் வைப்பில் இடுதல் வேண்டும். இக்கொடுப்பனவை ரொக்கப்பணமாகவோ

அல்லது வங்கியொன்றினால் வழங்கப்பட்ட "கொடுப்பனவுக்காக" என குறிப்பிட்ட காசோலையொன்றினால் அல்லது இலங்கை வங்கியினாலோ, மக்கள் வங்கியினாலோ வழங்கப்பட்ட "பாதுகாப்பான காசோலை" என அழைக்கப்படும் காசோலையினாலோ அல்லது வங்கியொன்றினால் அவ்வங்கியின் பெயருக்கு வழங்கப்பட்ட காசோலையொன்றினாலோ செலுத்தப்படல் வேண்டும். தேவையான அளவு முத்திரைகளை ஒட்டி மதுவகை தவறணைகள் ஒப்பந்தப்பத்திரத் தொகுதியில் கையொப்பமிடல் வேண்டும்.

6. ஒப்பந்தப்படி உடன்படும் கேள்விப் பணத்தொகையை தவணை முறையில் ரொக்கப் பணத்தில் மாத்திரம் செலுத்துதல் வேண்டும்.

7. ஏதாவது ஒரு கேள்விப்பத்திரத்தை பலபேர் சேர்ந்து முன்வைப்பதாயின் அந்த ஒவ்வொரு ஆளினதும் சொந்த முகவரியை வெவ்வேறாகத் தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

8. கள்ளுத் தவறணைகளிலோ பிற அனுமதிப்பத்திரம் உடைய இடங்களிலோ விற்பனைக்காக மொத்தமாக பீப்பாய்க் கணக்கில் கள் விநியோகிக்கப்படமாட்டாது என்பதை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

9. கண்டி எசல பெரஹரா நடைபெறும் வேளையிலும் வேறு காரணங்களுக்காகவும் இங்கு கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்படும் 1 ஆம் இலக்கக் கள்ளுத் தவறணையைத் தற்காலிகமாக மூடுவதற்கு என்னால் கட்டளையொன்றை விடுக்க வேண்டி ஏற்பட்டால், அவ்வாறு தவறணையை மூடும் காலப்பகுதிக்கு தவறணைக் கால வரையறையில் சலுகை ஏற்பாடு செய்யப்பட மாட்டாது.

10. கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியில் விற்பனை செய்ய முடியாதுபோன எஞ்சிய தவறணைகளை மீண்டும் 2024.09.10 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு விற்பனை செய்யப்படும். அன்றைய தினம் கேள்விப்பத்திரங்களை இந்த வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்படும் அறிவித்தலில் குறிக்கப்பட்டுள்ள தேவைகளுக்கு ஏற்ப முன்வைத்தல் வேண்டும்.

11. எனது முடிவே இந்தக் கேள்விகளை (டென்டர்) விற்பனை செய்வதற்கான இறுதி முடிவாகும்.

12. தவறணைகளை விற்பனை செய்வதற்குரிய ஒப்பந்த நிபந்தனைகளையும் மேலதிக விபரங்களையும் இந்த அலுவலகத்தில் கேட்டு அறிந்துகொள்ள முடியும்.

யூ. ஜே.எம்.எஸ்.எஸ். பி. ஜயசிங்க,
பிரதேச செயலாளர்,
கண்டி கடவத்சத்தர மற்றும் கங்கவட்ட கோரளை.

பிரதேச செயலகம்,
கண்டி கடவத்சத்தர மற்றும் கங்கவட்ட கோரளை,
2024, யூன் 07.

**அட்டவணை**

**கண்டி மாவட்டத்தில் 2024/2025ஆம்ஆண்டுக்காக அனுமதியளிக்கப்பட்ட கள்ளுத் தவறணைகளின் பட்டியல்**

| தொடர் இலக்கமும் பெயரும் | பிரிவு | தவறணையை அமைக்க வேண்டிய பிரிவு | தவறணை திறந்திருக்கும் நேரம் | கேள்விப் பத்திரங்களை (டென்டர்) ஏற்றுக் கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் |
|---|---|---|---|---|
| இல. 01 வட்டபுலுவ | கண்டி பிரிவில் இல.20, மஹய்யாவ மற்றும் இல. 07, மாபனாவதுர தேர்தல் பிரிவு | கட்டுகஸ்தோட்டை வீதியில் அந்த வீதியும் திருகோணமலை வீதி சந்தியில் கட்டுகஸ்தோட்டை வீதியும் வட்டாரந் தென்ன சந்திக்கும் இடையிலான பாதை கண்டி மாநகரில் இல.20, மஹய்யாவ மற்றும் இல. 07, மாபனா வதுர தேர்தல் பிரிவில் அமைந்துள்ள பிரதேசம் | மு.ப. 10.00 மணி தொடக்கம் பி.ப. 9.00 மணி வரை | 2024.08.13 ஆந் திகதி மு.ப.. 10.30 மணி வரை |

**கள்ளுத்தவறணை குத்தகைக் கேள்விகளுக்கான இறுப்புப் பணம் - 2024/2025**

| | | |
|---|---|---|
| இல. 01, வட்டபுலுவ | கள்ளுத் தவறணைக்கான குத்தகை | ரூபா 5,000.00 |

07-98/1

---

**லுணுகலை பிரதேச செயலாளர் பிரிவில் 2025 ஆம் ஆண்டுக்கான கள்ளுத்தவறணைகளுக்கான குத்தகை விற்பனை**

2025, சனவரி மாதம் 01 ஆந் திகதி முதல் 2025, திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலான காலப்பகுதியில் கீழ்க் குறிப்பிடப்பட்ட லுணுகலை பிரதேச செயலாளர் பிரிவின் புளித்த கள்ளினை சில்லறை விலைக்கு விற்பனை செய்வதற்கான 1982, ஓகத்து 20 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 207 கொண்ட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட புளித்த கள்ளினை விற்பனை செய்வதற்கான நிபந்தனைகளுக்கு அமைவாக 2024.08.21 ஆந் திகதி மு.ப. 10.30 மணிவரையில் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இத்தால் என்னால் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

2. குத்தகையினை பெற்றுக்கொள்ள முன்வருபவர்கள் இலங்கையில் அமைந்துள்ள ஏதாவதொரு பிரதேச செயலகத்தினூடாக பெற்றுக்கொள்ளக்கூடியதான குறித்த விண்ணப்பப்படிவத்தை முறைப்படி பூர்த்தி செய்து இங்கு கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப் பத்திரக் கட்டணத்தை செலுத்தி வருமான சான்றுப்பத்திரத்துடன் முகவரியிடப்பட்ட கடித உறையினுள் இட்டு உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்விப்பத்திரம் கோரப்பட்டுள்ள கள்ளுத் தவறணையின் இலக்கத்தையும் பெயரையும் தெளிவாக குறிப்பிட்டு அந்த தவறணைக்கென இங்கு குறிப்பிடப்பட்டுள்ள இறுதி நேரத்திற்கு முன்னதாக கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபால் மூலம் லுணுகலை பிரதேச செயலாளருக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரதாரர்கள் கேள்விப்பத்திரப் படிவங்களை பூரணப்படுத்தும்போது கேள்விப் பத்திரப் படிவத்தில் செய்கின்ற அனைத்து மாற்றங்களையும் தனது பூரண கையொப்பமிட்டு உறுதிப்படுத்துதல் வேண்டும். அவ்வாறு செய்யப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

4. கேள்விப்பத்திரதாரர்களால் லுணுகலை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பிரதேச சபை எல்லைக்குள் பொருத்தமான இடத்தினை தெரிவு செய்தல் வேண்டும்.

5. கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதி நாளாகிய 2024.08.21 ஆந் திகதி மு.ப.10.30 மணிக்கு அனைத்து கேள்விதாரர்களும் லுணுகலை பிரதேச செயலகத்திற்கு சமுகம் தரல் வேண்டும்.

6. யாதேனும் விடயமொன்றினை குறிப்பிட்டிராத கேள்விப்பத்திரமொன்றினையோ அல்லது அனைத்து கேள்விப் பத்திரங்களையோ நிராகரிக்கும் அதிகாரம் பிரதேச செயலாளருக்கு உண்டு.

7. மேற்குறிப்பிட்ட தினத்தில் குத்தகை விற்பனை செய்யப்படாதவிடத்து அதனை மீண்டும் விற்பனை செய்தல் 2024.09.19ஆந் திகதி மு.ப.10.30 மணிக்கு நடைபெறும். அதற்கான கேள்விப்பத்திரங்களை சமர்ப்பித்தல் இந்த வர்த்தமானி அறிவித்தலின் தேவைகளுக்கமைவானதாயிருத்தல் வேண்டும்.

8.ஒருவர் தனிப்பட்ட சிறப்புரிமைகள் பெற்றுக்கொண்டார் என பிரகடனப்படுத்தப்படின் அவ்வாறு பிரகடனப்படுத்தப்பட்ட தினம் பி.ப.2.00 மணிக்கு முன்னதாக அவர் லுணுகலை பிரதேச செயலாளரினால் விதிக்கப்படுகின்ற தொகையாக இரண்டு மாதக் கட்டணத்திற்கு கூடுதலான தொகையினைச் செலுத்தி தவறணை பற்றிய நிபந்தனைகளுக்கு ஒப்பமிடுதல் வேண்டும்.

9. கேள்விப்பத்திரம் சமர்ப்பித்தல் தொடர்பாக அறிந்துகொள்ள வேண்டிய மேலதிக விபரங்களை லுணுகலை பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

எஸ். புவனேந்திரன்,
பிரதேச செயலாளர்,
லுணுகலை.

பிரதேச செயலகம்,
லுணுகலை,
2024, யூன் 24 .

**அட்டவணை**

**2025 ஆம் வருடத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட கள்ளுத்தவறணைகள்**

லுணுகலை பிரதேச செயலாளர் பிரிவு

**2025.01.01 தொடக்கம் 2025.12.31 வரை**

| *தொடர் இல.* | *தவறணையின் பெயரும் முகவரியும்* | *பிரிவு* | *பிரதேச செயலக பிரிவில் தவறணையின் அமைவிடம்* | *தவறணை திறக்கப்படுகின்ற நேரம்* | *தவறணை மூடப்படுகின்ற நேரம்* | *கேள்வி வைப்புத் தொகை* | *கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும்* |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | இல.02, லுணுகலை கள்ளுத் தவறணை | லுணுகலை | கள்ளுத் தவறணைக்கான பொருத்தமான இடத்தினை கேள்விப்பத்திர தாரர்களால் லுணுகலை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பிரதேச சபை எல்லைக்குள் தெரிவு செய்தல் வேண்டும். | மு.ப.10.00 | பி.ப.9.00 | ரூபா 5000.00 | 2024.08.21 மு.ப.10.30 ***மீள் விற்பனை செய்யும் திகதி:*** சிறந்த கொள்வனவாளர் முன்வராவிடின் 2024.09.19ஆந் திகதி மு.ப.10.30 மணிக்கு மீள் விற்பனை செய்யப்படும். |

மஹதோவ தோட்ட எல்லைக்குள் இரவு நேர சிற்றுண்டிச்சாலைக்கு 2025 ஆம் வருடத்திற்கான அனுமதிப்பத்திரத்தினை புதுப்பிப்பது தொடர்பான சிபாரிசினை தோட்ட முகாமையாளர் 2024.08.21 ஆந் திகதிக்கு முன்னதாக கிடைக்கத்தக்கவாறு லுணுகலை பிரதேச செயலாளருக்கு அனுப்புதல் வேண்டும்.

07-210

---

**உடபலாத்த பிரதேச செயலாளர் பிரிவில் 2025 ஆம் ஆண்டுக்கான கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு வழங்கல்**

1982 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு பகிரங்கப்படுத்தப்பட்ட 1983 ஆம் ஆண்டிற்கும் மற்றும் அதற்கு பிற்பட்ட காலப் பகுதிக்கும், ஏற்புடையதான கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விற்கும் நிபந்தனைகளுக்கும், அக்காலப்பகுதியில் நடைமுறை வலுவுடையதான அனைத்து மதுவரி அனுமதிப்பத்திரங்களுக்கும் பொருந்தும் பொதுவான மதுவரி நிபந்தனைகளுக்கும் ஏற்ப 2025 ஆம் ஆண்டில் கள்ளுத் தவறணைகளை சில்லறைக்கு விற்கும் சிறப்புரிமைகளை கொள்வனவு செய்வதற்காக உடபலாத்த பிரதேச செயலாளரான என்னால் 2024.08.07 ஆந் திகதி மு. ப. 10.30 மணி வரை கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. அனைத்துக் கேள்விப்பத்திரங்களும் இலங்கையில் உள்ள ஏதாவது ஒரு பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பப்படிவத்தில் தயாரிக்கப்படல் வேண்டும். என்பதுடன்-

(அ) கேள்விப் பிணைப்பணமாக கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிட்டு குறித்த பிணைப் பணத்தொகையை இலங்கையில் உள்ள ஏதாவது ஒரு பிரதேச செயலகத்தில் வைப்புப் பணமாக வைப்பிலிட்டு பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டையும், மற்றும்

(ஆ) கேள்விப்பத்திரதாரரின் காணிகள் போன்ற அசையா சொத்துக்கள் அமைந்துள்ள பிரதேசத்தின் பிரதேச செயலாளரினால் பெற்றுக் கொண்ட தனது சொத்துக்களைப் பற்றிய சான்றிதழ் ஒன்றினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

கேள்விப்பத்திரம் மற்றும் சொத்துக்கள் தொடர்பான சான்றிதழ்கள் சமர்ப்பிப்பது தொடர்பாக மேற்படி கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விற்கும் நிபந்தனைகள் கோவையில் உள்ளடக்கப்பட்டுள்ள நியதிகளைச் சரியான முறையில் பின்பற்றப்பட வேண்டும் என கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிப்பவர்களிடம் இத்தால் ஆணித்தரமாக அறிவிக்கப்படுகின்றது.

கேள்விப்பத்திரங்களை நிரப்பும்போது கேள்விப்பத்திரதாரர்கள் கீழ்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்துதல் வேண்டும் :

(i) கேள்விப்பத்திரங்கள் முழுமையாக நிரப்பப்படல் வேண்டும். அவ்வாறு நிரப்பும்போது அங்கு குறிப்பிடப்படும் தொகையை இலக்கத்தில் மாத்திரம் அன்றி எழுத்திலும் குறிப்பிடப்படுதல் வேண்டும் ;

(ii) நிரப்பப்பட்ட கேள்விப்பத்திரங்களில் உரிய சாட்சியாளர்களின் கையொப்பம் இடப்பட்டிருத்தல் வேண்டும் ;

(iii) அனைத்து திருத்தங்களும் சொற்கள் வெட்டப்பட்டிருத்தலும் கேள்விப்பத்திரதாரரின் சுருக்க கையொப்பம் மற்றும் திகதி இட்டு உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

இங்கு நியதிகளுக்குப் புறம்பான வகையில் சமர்ப்பிக்கப்படும் கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

3. முறையாக நிரப்பிய கேள்விப்பத்திரங்கள் –

(அ) கேள்வி வைப்புப் பணம் வைப்பிலிட்டுப் பெற்றுக்கொண்ட பிரதேச செயலகத்தின் பற்றுச்சீட்டு ; மற்றும்

(ஆ) சொத்துக்கள் பற்றிய சான்றிதழ்.

என்பன இணைக்கப்பட்டு, கடித உறையொன்றில் இட்டு முத்திரையிட்டு, அத்தகைய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "தவறணையின் இலக்கம் மற்றும் பெயர்", என்பவற்றைக் குறிப்பிட்டு உடபலாத்த பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் கால எல்லை முடிவடைவதற்கு முன்பு இடுதல் வேண்டும். இன்றேல் கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் காலவரையறை முடிவடைவதற்கு முன்பு உடபலாத்த பிரதேச செயலாளருக்கு கிடைக்கும்படி பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

4. ஒவ்வொரு குத்தகையும் தொடர்பாக கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளும் முடிவு நேரம் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தகைய நேரங்களில் அனைத்து கேள்விப்பத்திரதாரரும் உடபலாத்த பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்திருத்தல் வேண்டும்.

5. திருப்தியான கேள்விப்பத்திரத்தை முன்வைத்த கேள்விப்பத்திரதாரரின் "சிறப்புரிமைகளை வழங்கியவர்" என பிரகடனப்படுத்தப்பட்ட பின்னர் அன்றைய திகதி பி. ப. 2.30 மணிக்கு முன்பு உடபலாத்த பிரதேச செயலாளரினால் விதிக்கப்படும் பணத்தொகையொன்றை பிணைப்பணமாக உடபலாத்த பிரதேச செயலகத்தில் வைப்பிலிட்டு உரிய கள்ளுத் தவறணைகள் விற்பனை செய்யும் நிபந்தனைக்கொத்தில் கையொப்பமிடல் வேண்டும். இக்கொடுப்பனவை ரொக்கப் பணமாகவோ அல்லது வங்கியொன்றினால் வழங்கப்பட்ட "கொடுப்பனவுக்காக" எனக் குறிப்பிட்ட காசோலை ஒன்றினால் அல்லது இலங்கை வங்கியிலோ அல்லது மக்கள் வங்கியிலோ வழங்கப்பட்ட "பாதுகாப்பான காசோலை" என அழைக்கப்படும் காசோலையினாலோ செலுத்தப்படல் வேண்டும்.

6. மேற்குறிப்பிட்ட திகதியில் விற்பனை செய்யப்படாத தவறணைகளின் குத்தகைகள் 2024.09.04 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மீண்டும் விற்பனைக்கு விடப்படும். அன்றைய தினம் கேள்விப்பத்திரங்கள் முன் வைப்பதற்கான தேவைப்பாடுகள் இவ்வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு ஏற்புடையதாயிருத்தல் வேண்டும்.

7. மேலதிக விபரங்களை இவ்வலுவலகத்தில் கேட்டு அறிந்துகொள்ளலாம்.

ஆத்மா திலுக்ஷி ஜயரத்ன,
பிரதேச செயலாளர்,
உடபலாத்த,
கம்பளை.

பிரதேச செயலகம்,
உடபலாத்த,
கம்பளை.

**அட்டவணை**

**2025 ஆம் ஆண்டிற்கான கம்பளை உடபலாத்த பிரதேச செயலாளர் பிரிவில் அங்கீகரிக்கப்பட்ட கள்ளுத் தவறணைகளின் பட்டியல்**

| தொடர் இலக்கமும் பெயரும் | பிரிவு | தவறணை அமைய வேண்டிய பிரதேசம் | தவறணை திறந்திருக்க வேண்டிய நேரங்கள் | கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | கேள்வி வைப்புத் தொகை ரூ. ச. |
|---|---|---|---|---|---|
| 1.வஹுக்கப்பிட்டிய கள்ளுத் தவறணை | உடபலாத்த | உடபலாத்த வஹுக்கப்பிட்டிய கிராமத்திற்குள் | மு.ப. 11.00 மணியிலிருந்து பி.ப. 2.00 மணிவரை பி.ப. 5.00 மணியிலிருந்து பி.ப. 8.00 மணி வரை | 2024.08.07 ஆந் திகதி மு.ப.10.30 | 1500.00 |
| 2.புஸ்ஸல்லாவ கள்ளுத் தவறணை | உடபலாத்த | உடபலாத்த புஸ்ஸல்லாவ நகரத்தின் எல்லைக்குள் | மு.ப. 11.00 மணியிலிருந்து பி.ப. 2.00 மணிவரை பி.ப. 5.00 மணியிலிருந்து பி.ப. 8.00 மணி வரை | 2024.08.07 ஆந் திகதி மு.ப.10.30 | 3000.00 |

07-301/2

---

**மட்டக்களப்பு மாவட்டத்தில் கோரளைப்பற்று வடக்கு வாகரைப் பிரதேச செயலகப் பிரிவில் வாகரை கள்ளுத் தவறணைக்கான மீள் குத்தகை விற்பனை**
**2024, யூலை - 2025 யூன்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1982.08.20 ஆந் திகதிய வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள 1982ஆம் வருட கள்ளுத்தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைவாக மட்டக்களப்பு மாவட்டத்தில் கோரளைப்பற்று வடக்கு வாகரைப் பிரதேசத்திற்குட்பட்ட வாகரைக் கள்ளுத்தவறணைக்கான கேள்வி 2024 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதி முதல் 2025, யூன் மாதம் 30ஆந் திகதி வரையுள்ள கள்ளு விற்கும் பிரத்தியேக உரிமைக்கு கேள்வி விண்ணப்பங்கள் கீழ்க் குறிப்பிட்ட திகதி, நேரம் வரை கோரளைப்பற்று வடக்கு வாகரை பிரதேச செயலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்வி திறக்கப்படும் போது கேள்விதாரர்கள் கோரளைப்பற்று வடக்கு வாகரை பிரதேச செயலகத்தில் நடாத்தப்படும் கேள்விச் சபைக் கூட்டத்திற்கு சமுகமளித்திருத்தல் வேண்டும்.

1. கேள்வி விண்ணப்பங்களின் பேரில் ஆயிரத்து ஐந்நூறு ரூபா (ரூபா 1,500 .00) பணத்தை கோரளைப்பற்று வடக்கு, வாகரை பிரதேச செயலாளரின் பெயரில் செலுத்திப் பெறப்படும் பற்றுச்சீட்டினைச் சமர்ப்பிக்கும் பட்சத்தில் விண்ணப்பப்படிவத்தை பெறமுடியும். இக்கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்கப்படும்போது இப்பற்றுச்சீட்டும் இணைக்கப்பட்டிருத்தல் அவசியமாகும். கேள்விப்பத்திர விநியோகம் 2024.07.08ஆந் திகதி முதல் 2024.07.22ஆந் திகதி முற்பகல் 11.00 மணியுடன் முடிவடையும்.

2. அந்தந்த பிரதேச செயலாளரினால் வழங்கப்படும் பெறுமதிச் சான்றிதழானது கேள்விதாரர் விண்ணப்பிக்கும் தொகையில் 15%ற்குக் குறைவாக இருத்தலாகாது. இப்பெறுமதிச் சான்றிதழ் கேள்விப்பத்திரத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

3. பிழையாக பூரணப்படுத்தப்படும் கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.

4. கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்காது கேள்விப்பத்திரங்களுக்கு செலுத்திய பணத்தை மீளப் பெற விரும்பினால் தங்களின் கோரிக்கையை கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கும் தினத்திலிருந்து இரண்டு வாரங்களுக்குள் தாங்கள் பெற்றுக்கொண்ட கேள்விப் பத்திரங்களை பூரணப்படுத்தாது பணம் செலுத்தியதற்குரிய பற்றுச்சீட்டுடன் மீளச் சமர்ப்பித்தால் அக்கோரிக்கைகள் கவனத்தில் கொள்ளப்படும்.

5. தவறணை தற்போது இருக்கும் இடத்தில் தொடர்ந்தும் இருக்கும் என்பதற்கு உத்தரவாதம் இல்லை.

6. பதிவு செய்யப்பட்ட தெங்கு, பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்கள் இந்த குத்தகை விற்பனையில் கலந்து கொள்வதாயின் சங்கம் அமைந்திருக்கும் பிரதேசத்திற்குரிய கள்ளுத் தவறணைக்கு மட்டுமே விண்ணப்பிக்க முடியும். அத்துடன் சங்கம் தற்போது இயங்கு கின்றமை பற்றியும் சங்கத்தால் கள்ளுத்தவறணையை குத்தகைக்கு எடுத்து நடாத்தக்கூடிய ஆற்றல் உள்ளமை பற்றியும் மட்டக்களப்பு மாவட்ட உதவிக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் சமர்ப்பிக்கும் பட்சத்திலேயே குத்தகை விற்பனைக்கான விண்ணப்பப்படிவம் வழங்கப்படும். ( நிதி அமைச்சின் 01/2012 ஆம் இலக்கம் கொண்ட 2012.01.05 ஆந் திகதிய சுற்றுநிருபத்திற்கமைவாக காணப்படுதல் வேண்டும்.)

7. ஏனைய விபரங்கள் கோரளைப் பற்று வடக்கு வாகரை பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**அட்டவணை**

| தவறணை அமைய வேண்டிய இடம் | தவறணை இலக்கம் | கேள்விப்பத்திரங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதியும் நேரமும் | |
|---|---|---|---|
| | | திகதி | நேரம் |
| பால் சேனை கிராம அலுவலர் பிரிவு | TT No. 05 | 2024.07.23 | மு.ப. 10.30 மணி |

**குறிப்பு.-** 1. கேள்விச் சபை 2024.07.23 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்குக் கூடும்.
2. விற்பனைத் தினத்தில் தகுதியான குத்தகைக்காரர் தேர்ந்தெடுக்கப்படாது விட்டால் மறு கேள்விச்சபை 2024.07.30 ஆந் திகதி மு.ப. 2.30 மணிக்கு நடைபெறும்.
3. தெரிவு செய்யப்படும் குத்தகைக்காரர் மீள் குத்தகை விற்பனை இடம்பெற்ற அதே தினத்தில் அலுவலக நேரத்தினுள் பாதுகாப்பு வைப்புத் தொகையை பிரதேச செயலகத்தில் செலுத்த வேண்டும்.

ஜீ. அருணன்,
பிரதேச செயலாளர்,
கோரளைப்பற்று வடக்கு,
வாகரை.

பிரதேச செயலகம்,
கோரளைப்பற்று வடக்கு.
வாகரை,
2024, யூன் 25.

07- 350

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## கம்பனியின் பெயர் மாற்றம் தொடர்பான பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் கீழ் 2024.04.01 ஆந் திகதி முதல் பின்வரும் கம்பனியின் பெயர்மாற்றப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*கம்பனியின் முன்னைய பெயர்:* ஏ டீ எஸ் கன்சல்டன்ட்ஸ் (பிரைவேட்) லிமிடெட்
*கம்பனியின் புதிய பெயர்:* எம் ஐ சீ டீ அசோசியேட்ஸ் ( பிரைவேட்) லிமிடெட்
*கம்பனி இல. :* PV *15117*
*பதிவு முகவரி:* இல.56, பூஜ்ய ஸ்ரீ தர்மரத்ன மாவத்தை, மாதிவெல, கோட்டே

கோர்ப்பரேட் அட்வைசரி சேர்விசஸ் (பிரைவேட்) லிமிடெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

*07- 104*

---

## கம்பனியின் பெயர் மாற்றம் தொடர்பான பகிரங்க அறிவித்தல்

*2024,ஏப்பிறல் 29 ஆந் திகதி முதல் அமுலுக்கு வருமாறு கீழ்க்காணும் கம்பனியின் பெயர் மாற்றப்பட்டுள்ளதாக 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.*

*கம்பனியின் பழைய பெயர்:* சியெர்ரா இலெக்ரிக்கல் என்ஜினியரிங் (பிரைவேட்) லிமிட்டட்
*கம்பனி இலக்கம் :* PV *3084*
*கம்பனியின் முகவரி:* இல.112, ஹெவ்லொக் ரோட், கொழும்பு -05
*கம்பனியின் புதிய பெயர்:* சியெர்ரா பெசிலிட்டி மெனேஜ்மன்ட் சேர்விசஸ் ( பிரைவேட்) லிமிட்டட்

சபையின் கட்டளைப் பிரகாரம்,

P.R. செக்ரடேரியல் சேர்விசஸ் (பிரைவேட்)
லிமிட்டட்,
கம்பனியின் கம்பனிச் செயலாளர்.

*07- 307*

---

## கம்பனியின் பெயர் மாற்றம் தொடர்பான பொது அறிவித்தல்

*2024,* மே 16 ஆந் திகதியிலிருந்து செயல்வலுப்பெறும் வகையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கம்பனியின் பெயரானது மாற்றப்பட்டுள்ளதென 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் பிரகாரம் அறிவித்தலானது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

*கம்பனியின் முன்னைய பெயர்:* எலிமெண்ட் ஹோம்ஸ் பை சியரா (பிரைவேட்) லிமிட்டட்
*கம்பனி இல. :* PV *00236171*
*கம்பனியின் பதிவு அலுவலக முகவரி:* இல.112, ஹெவ்லொக் வீதி, கொழும்பு -05
*கம்பனியின் புதிய பெயர்:* கொஜெனியுஸ் ( பிரைவட்) லிமிட்டட்

சபையின் கட்டளைப் பிரகாரம்,

பி.ஆர்.செக்ரட்டேரியல் சேர்விசஸ்
(பிரைவேட்) லிமிட்டட்,
கம்பனியின் கம்பனிச் செயலாளர்.

*07- 308*

**அறிவித்தல்**

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க வரையறுக்கப்பட்ட கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் விதியின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அறிவித்தல்*

*கம்பனியின் பெயர்:* வின்ஃபினிட்டி இன்ஜினியரிங் ( பிவிடி) எல்டிடீ
*பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி:* இல.30, உதம்மிட்ட, வேயன்கொடை
*கூட்டிணைக்கப்பட்ட திகதி:* 2024 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 07 ஆந் திகதி
*கம்பனி இல. :* PV 00296148

கம்பனிச் செயலாளர்.

*07- 309*

---

**நிறுவனத்தின் பெயர் மாற்றம் குறித்த அறிவிப்பு**
**பிரிவு 9(2) கம்பனிச் சட்டம்**

*முன்னாள் பெயர்:* ஸ்ரீ கணேஷா என்டர்பிரைஸ் (பிரைவேட்) லிமிடேட்
*புதிய பெயர்:* ஆனது புளு பிலிஸ் என்டர்பிரைசஸ் (பிரைவேட்) லிமிடேட்
*பதிவு செய்யப்பட்ட முகவரி:* இல.13, டி சில்வா ஒழுங்கை, வடரபல வீதி, கல்கிஸ்ஸை
*பதிவு செய்யப்பட்ட இலக்கம் :* PV 00284979

கம்பனியின் கட்டளைப்படி,

கிஹான் எம்பிசி குவாலிபைட் செக்ரடிஸ் என்ட்
கோபரேட் கன்சல்ட்டன்ஸ் (பிரைவேட்) லிமிடேட்,
கம்பனி செக்ரடிஸ்.
*0775436401.*

*07- 346*

---

# அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள்

**கண்டி கடவத்சத்தர கங்கவட்ட கோறளை பிரதேச செயலாளர் பிரிவுக்குள் வெளிநாட்டு குடிவகை தவறணைகளை குத்தகைக்கு விற்றல் - 2024/ 2025**

*1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பகிரங்கப்படுத்தப்பட்ட (பிரசுரிக்கப்பட்ட) 1983 ஆம் ஆண்டிற்கும் அதற்கு பிற்பட்ட காலப்பகுதிக்கும் ஏற்புடையதாக வெளிநாட்டுக் குடி வகை தவறணைகள் குத்தகைக்கு விற்கும் நிபந்தனைகளுக்கும் அக்காலப் பகுதியில் நடைமுறை வலுவுடையதான அனைத்து மதுவரி அனுமதிப்பத்திரங்களுக்கும் பொருந்தும் பொதுவான மதுவரி நிபந்தனைகளுக்கும் ஏற்ப 2024/2025 ஆம் ஆண்டில் வெளிநாட்டு குடிவகை சில்லறைக்கு விற்கும் சிறப்புரிமைகளை வாங்குவதற்கு கண்டி கடவத்சத்தர கங்கவட்ட கோறளை பிரதேச செயலாளராகிய என்னால் 2024.08.13 ஆந் திகதி முற்பகல் 10.30 மணி வரையில் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.*

2. அனைத்து கேள்விப்பத்திரங்களும் இலங்கையில் உள்ள பிரதேச செயலகங்களில் ஏதாவது ஒன்றில் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பப்படிவத்தில் தயாரிக்கப்படல் வேண்டும் ; அத்துடன்-

(அ) கேள்வி வைப்புப் பணமாக கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிட்ட குறித்த கேள்விப்பிணைப் பணத்தொகையை இலங்கையில் உள்ள ஏதாவது ஒரு பிரதேச செயலகத்தில் வைப்புப் பணமாக வைப்பிலிட்டு பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டையும்;

(ஆ) கேள்விப்பத்திரதாரரின் காணிகள் போன்ற அசையா சொத்துக்கள் அமைந்துள்ள பிரதேசத்தில் பிரதேச செயலாளரிடமிருந்து பெற்றுக்கொண்ட தனது சொத்துக்கள் பற்றிய சான்றிதழையும் கேள்விப் பத்திரத்துடன் முன்வைத்தல் வேண்டும்.

கேள்விகளையும் சொத்துக்கள் பற்றிய சான்றிதழையும் முன் வைக்கும் கேள்விப்பத்திரதாரர்களுக்கு மேற்படி வெளிநாட்டு குடிவகை தவறணைகளை விற்றலுடன் தொடர்புடைய நிபந்தனைப்பத்திரத்தில் அடங்கிய கட்டளைகளை முறையாகக் கடைப்பிடிக்க வேண்டுமென இத்தால் ஆணித்தரமாக அறிவிக்கப்படுகின்றது. கேள்விப்பத்திரங்களை நிரப்பும்போது கேள்விக்காரர்கள் கீழ்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்துதல் வேண்டும் :-

(i) கேள்விப்பத்திரங்கள் முழுமையாக நிரப்பப்படல் வேண்டும். அவ்வாறு நிரப்பும்போது அங்கு குறிப்பிடும் தொகையை இலக்கத்திலும் எழுத்திலும் குறிப்பிடல் வேண்டும்.

(ii) நிரப்பிய கேள்விப்பத்திரத்தில் சாட்சியாளர்களின் கையொப்பம் இடப்பட்டிருத்தல் வேண்டும்.

(iii) அனைத்து திருத்தங்களும் சொற்கள் வெட்டப்பட்டிருந்தாலும் கேள்விப்பத்திரதாரரின் சுருக்க கையொப்பத்துடன் திகதியும் இட்டு உறுதிப்படுத்தப்பட்டிருத்தலும் வேண்டும்.

(iv) பூரணமற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

3. முறையாக நிரப்பிய கேள்விப்பத்திரத்தை கேள்வி வைப்புப் பணம் வைப்பிலிட்டு பெற்றுக்கொண்ட -

(அ) பிரதேச செயலகப் பற்றுச்சீட்டுடனும்,

(ஆ) சொத்துக்கள் பற்றிய சான்றிதழுடனும்,

இணைத்து கடித உறையொன்றில் இட்டு முத்திரையிட்டு, அந்த கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "தவறணையின் இலக்கமும் பெயரும்" குறித்து கண்டி கடவத்சத்தர கங்கவட்ட கோறளை பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் கேள்விப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் கால எல்லை முடிவதற்கு முன்பு இடுதல் வேண்டும். இல்லாவிடின் கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் காலவரையறை முடிவதற்கு முன்பு கண்டி பிரதேச செயலாளருக்கு கிடைக்கும்படி பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

4. குத்தகை தொடர்பாக கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் முடிவுநேரம் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தகைய நேரங்களில் அனைத்து கேள்விப்பத்திரதாரரும் கண்டி பிரதேச செயலகத்தில் சமுகமளித்திருத்தல் வேண்டும்.

5. திருப்தியாக கேள்விப்பத்திரத்தை முன்வைத்த கேள்விப்பத்திரதாரர், சிறப்புரிமைகளை வாங்கியவர் என பிரகடனப்படுத்தப்பட்ட பின் அன்றைய தினம் பி. ப. 2.30 மணிக்கு முன்பு கண்டி பிரதேச செயலாளரினால் விதிக்கப்படும் பணத்தொகையொன்றை பிணைப்பணமாக கண்டி பிரதேச செயலகத்தில் வைப்பில் இடுதல் வேண்டும். இக்கொடுப்பனவை ரொக்கப்பணமாகவோ அல்லது வங்கியொன்றினால் வழங்கப்பட்ட "கொடுப்பனவுக்காக" எனக் குறிப்பிட்ட காசோலையொன்றினால் அல்லது இலங்கை வங்கியினாலோ, மக்கள் வங்கியினாலோ வழங்கப்பட்ட "பாதுகாப்பான காசோலை" என அழைக்கப்படும் காசோலையினாலோ அல்லது வங்கியொன்றினால் அவ்வங்கியின் பெயருக்கு வழங்கப்பட்ட காசோலையொன்றினாலோ செலுத்தப்படல் வேண்டும். தேவையானளவு முத்திரைகளை ஒட்டி மதுவகை தவறணைகள் ஒப்பந்தப் பத்திரத் தொகுதியில் கையொப்பமிடல் வேண்டும்.

6. ஒப்பந்தப்படி உடன்படும் கேள்விப் பணத்தொகையை தவணை முறையில் ரொக்கப் பணத்தில் மாத்திரம் செலுத்த முடியும்.

7. ஏதாவது ஒரு கேள்விப்பத்திரத்தை பலபேர் சேர்ந்து முன்வைப்பதாயின் அந்த ஒவ்வொரு ஆளினதும் சொந்த முகவரியை வெவ்வேறாக தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

8. வெளிநாட்டு மதுபான தவறணைகளிலோ பிற அனுமதிப்பத்திரம் உடைய இடங்களிலோ விற்பனைக்காக மொத்தமாக பீப்பாய்க் கணக்கில் வெளிநாட்டு குடிவகை விநியோகிக்கப்படமாட்டாது என்பதை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

9. கண்டி எசல பெரஹரா நடைபெறும் வேளையிலும் வேறு காரணங்களுக்காகவும் இங்கு கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்படும் 1 ஆம் இலக்க வெளிநாட்டு மதுபானத் தவறணையை தற்காலிகமாக மூடுவதற்கு என்னால் கட்டளையொன்றை விடுக்க வேண்டி ஏற்பட்டால், அவ்வாறு தவறணையை மூடும் காலப்பகுதிக்கு, தவறணைக் கால வரையறையில் சலுகை ஏற்பாடு செய்யப்பட மாட்டாது.

10. மேற்படி கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியில் விற்பனை செய்ய முடியாதுபோன எஞ்சிய வெளிநாட்டு தவறணைகளை மீண்டும் 2024.09.10ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மீண்டும் விற்பனை செய்யப்படும். அன்றைய

தினம் கேள்விப்பத்திரங்களை இந்த வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்படும் அறிவித்தலில் குறிக்கப்பட்டுள்ள தேவைகளுக்கு ஏற்ப முன்வைத்தல் வேண்டும்.

11. எனது முடிவே இந்த கேள்விப் பத்திரங்களை (டென்டர்) விற்பனை செய்வதற்கான இறுதி முடிவாகும்.

12. தவறணைகளை விற்பனை செய்வதற்குரிய ஒப்பந்த நிபந்தனைகளையும் மேலதிக விபரங்களையும் இந்த அலுவலகத்தில் கேட்டு அறிந்து கொள்ள முடியும்.

யூ.ஜே.எம்.எஸ்.எஸ். பீ. ஜயசிங்க,
பிரதேச செயலாளர்,
கண்டி கடவத்சத்தர மற்றும்
கங்கவட்ட கோறளை.

பிரதேச செயலகம்,
கண்டி கடவத்சத்தர மற்றும் கங்கவட்ட கோறளை,
2024.06.07.

**அட்டவணை**

**கண்டி மாவட்டத்தில் அனுமதியளிக்கப்பட்ட வெளிநாட்டு குடிவகை தவறணைகளின் பட்டியல்**

| தொடர் இலக்கமும் பெயரும் | பிரிவு | தவறணையை அமைக்கவேண்டிய பிரிவு | தவறணை திறந்திருக்கும் நேரம் | கேள்விப் பத்திரங்களை (டென்டர்) ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் |
|---|---|---|---|---|
| இல. 01 கொழும்பு வீதி | கண்டி நகரத்தில் இல. 17, யட்டிநுவர மற்றும் இல. 18, கொட்டுகொடல்ல வீதி | கண்டி நகரத்தில் இல.17, யட்டிநுவர மற்றும் இல.18, கொட்டுகொடல்ல வாக் கெடுப்புப் பிரிவிற்குள் கொழும்பு வீதி மற்றும் காசல் ஹில் வீதி சந்தியிலிருந்து கொழும்பு வீதி வடுகொடபிட்டிய பாதையில் சந்திக்கு இடைப்பட்ட பகுதி கொழும்பு வீதி இரு மருங்கிலும் | மு. ப. 10.00 மணி தொடக்கம் பி. ப. 9.00 மணிவரை | 2024.08.13 ஆந் திகதி மு. ப. 10.30 மணிவரை |

வெளிநாட்டு குடிவகை தவறணைகள் குத்தகை கேள்விகளுக்கான இறுப்புப் பணம் 2024/2025

இல. 01 வெளிநாட்டு குடிவகை தவறணை குத்தகை ரூபா 5000.00

07-98/2

---

**உடபலாத்த பிரதேச செயலாளர் பிரிவு**

**2025 ஆம் ஆண்டுக்கான வெளிநாட்டு குடிவகைத் தவறணைகளை**

**குத்தகைக்கு வழங்கல்**

1982 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு பகிரங்கப்படுத்தப்பட்ட 1983 ஆம் ஆண்டுக்கும் அதற்கு பிற்பட்ட காலப் பகுதிக்கும், ஏற்புடையதான வெளிநாட்டு மதுபான வகைகளை விற்கும் நிபந்தனைகளுக்கும், அக்காலப்பகுதியில் நடைமுறை வலுவுடையதான அனைத்து மதுவரி அனுமதிப்பத்திரங்களுக்கும் பொருந்தும் பொதுவான மதுவரி நிபந்தனைகளுக்கும் ஏற்ப 2025 ஆம் ஆண்டின் வெளிநாட்டுக்

குடிவகைகளை சில்லறைக்கு விற்கும் சிறப்புரிமைகளை கொள்வனவு செய்வதற்காக உடபலாத்த பிரதேச செயலாளரான என்னால் 2024.08.07ஆந் திகதி மு. ப. 10.30 மணி வரை கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

02. அனைத்து கேள்விப்பத்திரங்களும் இலங்கையில் உள்ள ஏதாவதொரு பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பப்படிவத்தில் தயாரிக்கப்படல் வேண்டும் என்பதுடன்,

(அ) கேள்விப் பிணைப்பணமாக கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிட்டு குறித்த பிணைப் பணத்தொகையை இலங்கையில் உள்ள ஏதாவது ஒரு பிரதேச செயலகத்தில் வைப்புப் பணமாக வைப்பிலிட்டு பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டையும் ; மற்றும்

(ஆ) கேள்விப்பத்திரதாரரின் காணிகள் போன்ற அசையா சொத்துக்கள் அமைந்துள்ள பிரதேசத்தின் பிரதேச செயலாளரினால் பெற்றுக் கொண்ட தனது சொத்துக்களைப் பற்றிய சான்றிதழ் ஒன்றையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

கேள்விப்பத்திரம் மற்றும் சொத்துக்கள் தொடர்பான சான்றிதழ்கள் சமர்ப்பிப்பது தொடர்பாக மேற்படி வெளிநாட்டு மதுபான தவறணைகளை குத்தகைக்கு விற்கும் நிபந்தனைகள் கோவையில் உள்ளடக்கப்பட்டுள்ள நியதிகளைச் சரியான முறையில் பின்பற்றப்பட வேண்டும் என கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிப்பவர்களிடம் இத்தால் ஆணித்தரமாக அறிவிக்கப்படுகிறது.

கேள்விப்பத்திரங்களை நிரப்பும்போது கேள்விப்பத்திரதாரர்கள் கீழ்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்துதல் வேண்டும் :-

(i) கேள்விப்பத்திரங்கள் முழுமையாக நிரப்பப்படல் வேண்டும். அவ்வாறு நிரப்பும்போது அங்கு குறிப்பிடப்படும் தொகையை இலக்கத்திலும் எழுத்திலும் குறிப்பிடல் வேண்டும் ;

(ii) நிரப்பப்பட்ட கேள்விப்பத்திரங்களில் உரிய சாட்சியாளர்களின் கையொப்பம் இடப்பட்டிருத்தல் வேண்டும் ;

(iii) அனைத்து திருத்தங்களுக்கும் சொற்கள் வெட்டப்பட்டிருத்தலும் கேள்விப்பத்திரதாரரின் சுருக்க கையொப்பம் மற்றும் திகதி இட்டு உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

இங்கு நியதிகளுக்குப் புறம்பான வகையில் சமர்ப்பிக்கப்படும் கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

03. முறையாக நிரப்பிய கேள்விப்பத்திரங்கள்,-

(அ) கேள்வி வைப்புப் பணம் வைப்பிலிட்டுப் பெற்றுக்கொள்ளப்பட்ட பிரதேச செயலகத்தின் பற்றுச்சீட்டு ; மற்றும்

(ஆ) சொத்துக்கள் பற்றிய சான்றிதழ்.

என்பன இணைத்து கடித உறையொன்றில் இட்டு முத்திரையிட்டு, அத்தகைய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "தவறணையின் இலக்கமும் பெயரும்" குறிப்பிட்டு உடபலாத்த பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் கால எல்லை முடிவடைவதற்கு முன்பு இடுதல் வேண்டும். இல்லாவிட்டால் கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் காலவரையறை முடிவடைவதற்கு முன்பு உடபலாத்த பிரதேச செயலாளருக்கு கிடைக்கும்படி பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

04. ஒவ்வொரு குத்தகையும் தொடர்பாக கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளும் முடிவு நேரம் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தகைய நேரங்களில் அனைத்து கேள்விப்பத்திரதாரரும் உடபலாத்த பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்திருக்க வேண்டும்.

05. திருப்தியான கேள்விப்பத்திரத்தை முன்வைத்த கேள்விப்பத்திரதாரரின் "சிறப்புரிமைகளை வழங்கியவர்" என பிரகடனப்படுத்தப்பட்ட பின்னர் அன்றைய திகதி பி. ப. 2.30 மணிக்கு முன்பு உடபலாத்த பிரதேச செயலாளரினால் விதிக்கப்படும் பணத்தொகையொன்றை பிணைப்பணமாக உடபலாத்த பிரதேச செயலகத்தில் வைப்பிலிட்டு உரிய வெளிநாட்டு குடிவகை தவறணைகள் விற்பனை செய்யும் நிபந்தனைப் படிவத்தில் கையொப்பமிடல் வேண்டும். இக்கொடுப்பனவை ரொக்கப் பணமாகவோ அல்லது வங்கியொன்றினால் வழங்கப்பட்ட "கொடுப்பனவுக்காக" எனக் குறிப்பிட்ட காசோலை ஒன்றினால் அல்லது இலங்கை வங்கியிலோ அல்லது மக்கள் வங்கியிலோ வழங்கப்பட்ட "பாதுகாப்பான காசோலை" என அழைக்கப்படும் காசோலையினாலோ செலுத்தப்படல் வேண்டும்.

06. மேற்கூறப்பிட்ட திகதியில் விற்பனை செய்ய இயலாத தவறணைகளின் குத்தகைகள் 2024.09.04 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மீண்டும் விற்பனைக்கு விடப்படும். அன்றைய தினம் கேள்விப்பத்திரங்கள் முன் வைப்பதற்கான தேவைப்பாடுகள் இவ்வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு ஏற்புடையதாயிருத்தல் வேண்டும்.

07. மேலதிக விபரங்களை இவ்வலுவலகத்தில் கேட்டு அறிந்துகொள்ளலாம்.

ஆத்மா டிலுக்ஷி ஜயரத்ன,
பிரதேச செயலாளர்,
உடபலாத்த.

உடபலாத்த பிரதேச செயலகம்,
கம்பளை.

**அட்டவணை**

*2025 ஆம் ஆண்டிற்கான கம்பளை உடபலாத்த பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு குடிவகை தவறணைகளின் பட்டியல்*

| தொடர் இலக்கமும் பெயரும் | பிரிவு | தவறணை அமைய வேண்டிய பிரதேசம் | தவறணை திறந்திருக்க வேண்டிய நேரம் | கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | கேள்வி வைப்புத் தொகை ரூ. ச. |
|---|---|---|---|---|---|
| 1. புஸ்ஸல்லாவ வெளிநாட்டு மதுபானத் தவறணை | உடபலாத்த | புஸ்ஸல்லாவ நகர எல்லைக்குள் | மு. ப. 11.00 மணியில் இருந்து பி. ப. 2.00 மணி வரை<br><br>பி. ப. 5.00 மணியில் இருந்து பி. ப. 8.00 மணி வரை | 2024.08.07 ஆந் திகதி மு. ப. 10.30 மணி | 3,000 |

07-301/1

---

## நோர்வுட் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கள்ளுத் தவறணைகள் வெளிநாட்டு குடிவகை தவறணைகள் குத்தகை விற்பனை-2024- 2025

1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு, 1983 ஆம் ஆண்டிலும் அதற்குப் பின்னரான காலத்திலும் நடைமுறையில் உள்ளவாறான கள்ளு, வெளிநாட்டு மதுவகை தவறணைகள் உத்தவுப்பத்திரம் சம்பந்தமாக கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கமைய 2024-2025 ஆம் ஆண்டுக்கான குத்தகைக்குக் கொடுத்தல், இக்காலப்பகுதியில் கள்ளு வெளிநாட்டு மதுவகைத் தவறணைகள் ( தானியவகைகளைக் கொண்டு இந்நாட்டில் தயாரிக்கப்படும் மதுவகை உட்பட) தனிநபருக்காக சில்லறை விற்பனை குத்தகைக்குக் கொடுப்பதற்கான உத்தரவுப்பத்திரம் வழங்குவதற்கான கேள்விகள் 2024.08.08 ஆந் திகதி மு.ப. 10.30 மணி வரை கேள்விப்பத்திரம் நோர்வுட் பிரதேச செயலாளரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. (அ) இத்தீவின் பிரதேச செயலாளர் செயலகங்களில் பெறப்படும் குறிப்பிட்ட படிவத்தில் மாத்திரமே கேள்விகள் அனுப்பப்படல் வேண்டும்.

(ஆ) அட்டவணையில் குறிப்பிட்ட தொகையை எந்தவொரு பிரதேச செயலகத்திலாவது செலுத்தி அதன் பற்றுச் சீட்டு இணைக்கப்படல் வேண்டும்.

(இ) பிரதேச செயலாளரால் வழங்கிய கேள்விகாரரின் அசைவற்ற ஆதனங்களின் பெறுமதிக்கான அத்தாட்சிப்பத்திரம் சமர்ப்பிக்கப்படும்போது கள்ளுத் தவறணைகளினதும் , வெளிநாட்டு மதுவகைக் குத்தகைக்கான நிபந்தனைகளுக்குட்பட்டவராக கேள்விதாரர் இருத்தல் வேண்டும்.

(ஈ) கேள்விப்பத்திரம் நிரப்பும் போது கேள்விதாரர் கீழ்க்காணும் முக்கியத்துவங்களை கருத்தில் கொள்ள வேண்டும்.

(i) கேள்விப்பத்திரம் முழுமையாக நிரப்பப்படல் வேண்டும். கேள்வித் தொகை எழுத்திலும், இலக்கத்திலும் குறிப்பிடல் வேண்டும்.

(ii) பூரணப்படுத்தப்பட்டுள்ள கேள்விப்பத்திரமானது கையொப்பமிடும் சாட்சிகளது தேசிய ஆளடையாள அட்டையின் இலக்கத்தையும் குறிப்பிடல் வேண்டும்.

(iii) கேள்விப்பத்திரத்தில் ஏதாவது திருத்தங்கள், மாற்றங்கள் செய்யப்படின் கேள்விதாரரின் முழுமையான கையொப்பத்தையும், திகதியையும் இட்டு உறுதிப்படுத்தல் வேண்டும்.

(iv) ஒவ்வொரு கேள்விக்காரர்களும் தமது அத்தாட்சிப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டையின் பிரதியை கேள்விப்பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

மேற்படி நிபந்தனைகளுக்கு உட்படாத பட்சத்தில் கேள்விகள் இரத்துச் செய்யப்படும்.

03. முறையாக நிரப்பப்பட்ட கேள்விப்பத்திரம், கேள்விப்பத்திரத்திற்கான வைப்புச் செய்யப்பட்ட பற்றுச் சீட்டு, பெறுமதிச் சான்றிதழ் ஆகியவற்றுடன் முத்திரையிடப்பட்ட கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் தவறணைக்கான பெயரையும், இலக்கத்தையும் குறிப்பிட்டு நோர்வுட் பிரதேச செயலாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் கேள்விகள் சமர்ப்பிக்க வேண்டிய கால எல்லைக்குள் போடப்படல் வேண்டும். தபாலில் கேள்விகளை சமர்ப்பிக்க விரும்புவோர் குறிப்பிட்ட கால எல்லை முடிவடைவதற்குள் பதிவு தபால் மூலம் நோர்வுட் பிரதேச செயலாளருக்கு அனுப்பப்படல் வேண்டும்.

04. கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதிக் கால எல்லை கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தருணத்தில் கேள்விக்காரர்கள் பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.

05. எந்தவொரு கேள்விப்பத்திரத்தையும் ஏற்கவோ நிராகரிக்கவோ பிரதேச செயலாளருக்கு அதிகாரம் உண்டு.

06. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விதாரர்கள் விற்பனைத் தினத்தன்று பிற்பகல் 2.00 மணிக்கு முன் நோர்வுட் பிரதேச செயலாளரால் தீர்மானிக்கப்பட்ட தொகையை பிணைப்பணமாக நோர்வுட் பிரதேச செயலாளருக்கு செலுத்துதல் வேண்டும். மேற்படி வைப்புப் பணம் நோர்வுட் இலங்கை வங்கியில் ஒரு வருட நிரந்தர சேமிப்புக்கணக்கில் எனது பெயரால் வைப்புச்செய்ய குத்தகையாளர் சம்மதிக்க வேண்டும். மேற்படி பிணைப்பணம் காசாக அல்லது இலங்கை வங்கி அல்லது மக்கள் வங்கியினால் கொடுக்கப்படும் பாதுகாப்பான காசோலை மூலமாக செலுத்தப்பட வேண்டும். உடன்படிக்கையில் கையொப்பமிடுவதற்குத் தேவையான முத்திரைகள் கேள்விக்காரரால் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

07.நியமிக்கும் தவணைப்பணக் கட்டணம் மாதாந்தக் காசாக செலுத்துபவர் மட்டுமே கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவர்களாவர்.

08. கேள்விப்பத்திரம் கூட்டாக சமர்ப்பிக்கும் பட்சத்தில் ஒவ்வொருவருடைய பிரத்தியேக முகவரியையும் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

09 .மேற்குறிப்பிடப்பட்ட தினத்தில் விற்பனை செய்யப்படாத தவறணைகள் 2024.09.05 ஆந் திகதி மு.ப. 10.30 மணியளவில் மீள விற்பனை செய்யப்படும்.

10. மேற்படி தவறணைகள் குத்தகைக்குக் கொடுப்பது சம்பந்தமாக இறுதித் தீர்மானம் பிரதேச செயலாளருடையதாகும்.

11. தவறணைகள் குத்தகை பற்றிய மேலதிக விபரங்கள் நோர்வுட் பிரதேச செயலாளர் அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

**அட்டவணை**

**வெளிநாட்டு குடிவகை தவறணைகள்**

| இலக்கமும் தவறணையின் பெயர் | தவறணை நிறுவப்பட வேண்டிய இடம் | கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி | கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் நேரம் | கேள்வி பிணைப்பணம் ரூ.ச. |
|---|---|---|---|---|
| 1. நோர்வுட் | நோர்வுட் நகர எல்லையில் 3 ஆம் இலக்க வட்டாரத்திற்குட்பட்ட பிரதேசம் | 2024.08.08 | மு.ப.10.30 | 5,000.00 |
| 2. டிக்கோயா | ஹட்டன் டிக்கோயா நகர எல்லையில் 4 ஆம் இலக்க வட்டாரத்திற்குட்பட்ட பிரதேசம் | 2024.08.08 | மு.ப.10.30 | 5,000.00 |
| 3. டிக்கோயா | ஹட்டன் டிக்கோயா நகர எல்லையில் 5 ஆம் இலக்க வட்டாரத்திற்குட்பட்ட பிரதேசம் | 2024.08.08 | மு.ப.10.30 | 5,000.00 |

I.M. சேனாநாயக்க,
பிரதேச செயலாளர்,
நோர்வுட்.

பிரதேச செயலகம்,
நேர்வுட்,
2024, யூன் 27.

07- 349

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப் பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

***முக்கிய கவனிப்பு.***– இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

**அட்டவணை - 2024**

| *மாதம்* | | *வெளியீட்டு நாள்* | | | *அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும்* | | |
|---|---|---|---|---|---|---|---|
| **யூலை** | .. | வெள்ளி | 05.07.2024 | .. | நண்பகல் 12 | வியாழன் | 20.06.2024 |
| | | வெள்ளி | 12.07.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.06.2024 |
| | | வெள்ளி | 19.07.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.07.2024 |
| | | வெள்ளி | 26.07.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.07.2024 |
| **ஓகத்து** | .. | வெள்ளி | 02.08.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.07.2024 |
| | | வெள்ளி | 09.08.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.07.2024 |
| | | வெள்ளி | 16.08.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.08.2024 |
| | | வெள்ளி | 23.08.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.08.2024 |
| | | வெள்ளி | 30.08.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.08.2024 |
| **செத்தெம்பர்** | .. | வெள்ளி | 06.09.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.08.2024 |
| | | வெள்ளி | 13.09.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.08.2024 |
| | | வெள்ளி | 20.09.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.09.2024 |
| | | வெள்ளி | 27.09.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.09.2024 |

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.